## சுருக்கம்

மாநகராட்சி நிர்வாகம் – திருநெல்வேலி மாநகராட்சிக்குச் சொந்தமான கண்டியப்பேரி பொது மருத்துவமனை கட்டிடம் மற்றும் நிலத்தினை திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையுடன் இணைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை**

**அரசு ஆணை (நிலை) எண். 150** **நாள் : 06.8.2008**

**படிக்க :**

1) ஆணையாளர், திருநெல்வேலி மாநகராட்சி ஆர்ஒசி/எண்.எச்1/10269/99இ நாள் 12.6.04
2) நகராட்சி நிர்வாக ஆணையரின் கடித எண். 41086/2004/எம்சிபி1, நாள் 23.7.04
3) அரசு கடிதம் எண்.5654/மாந2/07–8, நநிமகுவ, நாள் 14.1.08
4) ஆணையாளர் , திருநெல்வேலி மாநகராட்சி கடிதம் ந.க.எண்.10269/ 1997 /எச் 1, நாள் 26.3.08
5) மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி கடிதம் எண்.15/26978/08, நாள் 29.4.08

----

**ஆணை :**

திருநெல்வேலி மாநகராட்சியில் அமைந்துள்ள கண்டியப்பேரி மருத்துவமனை பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையாக 1954–ல் ஆரம்பிக்கப்பட்டது. மேற்படி மருத்துவமனை 20 படுக்கைகள் வசதி கொண்டு செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனை 2001 ஆம் ஆண்டு முதல் ஆண்களும் பெண்களும் மருத்துவம் செய்து கொள்ளும் வகையில் பொது மருத்துவமனையாக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

2) திருநெல்வேலி மாநகராட்சி கண்டியப்பேரி மருத்துவமனையின் மொத்த நில அளவு 4.78 ஏக்கர் ஆகும். இம்மருத்துவமனை கட்டிடம் மற்றும் பணியாளர் குடியிருப்பு ஆகிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:–

| | |
|---|---|
| மருத்துவமனை கட்டிடம் (தரைத்தளம் மற்றும் முதல் தளம்) | 781 m2 |
| மருத்துவ அலுவலர் மற்றும் பணியாளர்கள் குடியிருப்பு | 375 m2 |
| மொத்தம் ஒப்படைக்கப்படும் கட்டிடத்தின் அளவு | 1156 m2 |
| மருத்துவமனை கட்டிடம் மற்றும் பணியாளர்கள் குடியிருப்பு (இடத்தின் அளவு) | 13504 m2 |

கண்டியப்பேரி மருத்துவமனையில் உள்ள 20 படுக்கைகள் பயன்பாட்டு விபரம் கீழே தரப்பட்டுள்ளது:-

| | |
|---|---|
| கர்ப்பிணி பெண்கள் வார்டு | – 4 படுக்கைகள் |
| பிரசவித்த தாய்மார்கள் மற்றும் பெண்கள் பொது வார்டு | – 4 |
| குழந்தைகள் வார்டு | – 4 |
| ஆண்கள் வார்டு | – 8 |

3) மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 2007–08 ம் ஆண்டு மக்கள் நலவாழ்வுத்துறை மானிய கோரிக்கையின் மீது, திருநெல்வேலி மாநகராட்சி கண்டியப்பேரி மருத்துவமனையினை திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையுடன் இணைக்கப்படும் என அறிவிப்பு செய்தார்கள்.

4) திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர், தனது 3.10.2007 ஆம் நாளிட்ட கடிதத்தில், தற்போது ஒப்படைப்பதாக உள்ள கட்டிடத்திற்கு அருகில் உள்ள ரா.பி.சேதுப்பிள்ளை கட்டிடம், வெளி நோயாளிகள் பிரிவிற்கு தேவைப்படும் எனவும், மேலும் அடிப்படை பணியாளர்களது குடியிருப்புகளையும் கொடுத்தால் மிகவும் பயனுடையதாக இருக்கும் என கூறி, பரப்பளவு விபரங்களுடன் அனுப்பிட கேட்டுக் கொண்டுள்ளார்.

5) திருநெல்வேலி மாநகராட்சி கண்டியப்பேரி மருத்துவமனையை திருநெல்வேலி , அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையுடன் இணைக்க கீழ்க்கண்டவாறு திருநெல்வேலி மாநகராட்சி மாமன்றம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது என திருநெல்வேலி மாநகராட்சி ஆணையாளர் தெரிவித்துள்ளார்:-

அ) கண்டியப்பேரி மருத்துவமனை வளாகம் முழுவதையும் ஒப்படைக்கவும், மற்றும் ரூ.24,00,000/– (ரூபாய் இருபத்து நான்கு இலட்சம் மட்டும்) மதிப்பிலான இயந்திரங்கள் மற்றும் தளவாட சாமான்களையும் ஒப்படைக்கவும்.

ஆ) கட்டிடத்தின் சிறிய மராமத்து பணிகள் செய்தும் மற்றும் வெள்ளையடித்து ஒப்படைக்கவும்.

இ) கண்டியப்பேரி மாநகராட்சி மருத்துவமனையை அரசு மருத்துவக் கல்லூரியுடன் ஒப்படைக்கும் நிலையில் இதில் பணியாற்றும் மாநகராட்சி பணியாளர்களை ஓராண்டு காலத்திற்கு பணியாற்ற அனுமதிக்கவும். மருத்துவத்துறை இயக்குநர் அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பணியாளர்களை ஓராண்டு காலத்திற்குள் நியமனம் செய்தபின் மாநகராட்சி பணியாளர்களை திரும்பப் பெறவும்.

.

ஈ) குடிநீர் விநியோகம், பாதாள சாக்கடை இணைப்பு ஆகியவற்றை கண்டியப்பேரி மருத்துவமனை கட்டிடத்திற்கு மருத்துவத் துறைக்கு ஒப்படைக்கும் முன் மாநகராட்சி ஏற்பாடு செய்து கொடுக்கவும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

6) மேலே பத்தி 5–ல் கண்டுள்ள திருநெல்வேலி மாநகராட்சி மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் திருநெல்வேலி மாநகராட்சிக்குச் சொந்தமான கண்டியப்பேரி மருத்துவமனை கட்டிடம் மற்றும் நிலத்தினை, திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையுடன் இணைக்க அரசு அனுமதி வழங்கி ஆணையிடுகிறது.

7) பத்தி 6–ல் ஆணையிடப்பட்டுள்ளவாறு கட்டிடம் மற்றும் நிலங்கள் ஒப்படைத்தல் குறித்து உரிய நடவடிக்கை தொடரவும், மற்றும் இம்மருத்துவமனையை மேம்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை குறித்து அறிக்கை அளிக்கவும் திருநெல்வேலி மாநகராட்சி ஆணையர், மாவட்ட ஆட்சியர் மற்றும் முதல்வர், அரசு மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

/ ஆளுநரின் ஆணைப்படி /

கே.தீனபந்து,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஆணையாளர், திருநெல்வேலி மாநகராட்சி.
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5
மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி மாவட்டம்.
முதல்வர், அரசு மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி
நகல்
மக்கள் நலவாழ்வு மற்றும் குடும்ப நலம் (Z2)துறை, சென்னை–9.
வருவாய்த் துறை , சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலரின் தனிச்செயலர்,சென்னை–9.
மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு.II) துறை, சென்னை – 9,
இருப்பு கோப்பு / உதிரி நகல்

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்.